1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கடந்த 5000 ஆண்டுகளாக வரலாற்று நூல்களை எடுத்துப் பார்த்தால் கல்லிலே எவ்வளவு மிக அரிய கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்றவற்றின் பெருமையைத் தெரிந்து கொள்வதற்கு அங்கே இருக்கும் கற்பாளங்களில் செதுக்கப்பட்டு இருப்பவைதான் மிகத் துணையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி நவீன காலத்தில் அவை ஒன்றும் பயன் அளிக்காது என்று சொல்வது பொருத்தமாகாது. கல்லில் செதுக்கப்பட்டவைகள் என்றும் நிலைத்து இருப்பவை. காண்போர் கண்களில் எல்லாம் நாள்தோறும் தென்படக் கூடியவை. அப்படிப்பட்ட கல் வெட்டுக்கள் நாட்டிற்கு மிகமிகத் தேவை.

கதர் விற்பனை

* 132 வினு—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழகத்தில் அதிகமாக கதர் விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காஞ்சிபுரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: எவ்வளவு தொகைக்கு இந்த ஒன்றியத்தின் மூலம் கதர் விற்பனை செய்யப்பட்டது? சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 2,59,674.40 மதிப்புள்ள கதர் விற்கப்பட்டுள்ளது. இது தீபாவளி காலம், காந்தியார் நூற்றுண்டுக் காலம் ஆகிய காலங்களில் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக விற்கப்பட்டதாகும். இதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும் முதல் பரிசு ரூ. 500, இரண்டாவது பரிசு ரூ. 300, மூன்ருவது பரிசு ரூ. 200 ஆகிய நிலைகளிலே பாராட்டும் பொருட்டு கோப்பைகளும், கேடயங்களும் இவர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு, அப்படி வழங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள்

* 133 வினு—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்க ஊழலைக் கண்டுபிடிக்க விசேஷ ரகசியத் துப்பறியும் பிரிவை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் என்ருல், விபரம் என்ன?